JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW-   - Pw- 9- Witness
for Prosecution

CC.No. 170/2022 Crime No. 154/2022 Station Appakoodal

| | | |
|---|---|---|
| Name | Pw. 9 கிருஷ்ணமூர்த்தி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 03.06.2026 | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கின் புகார்தாரர் தனது புகாரில் தாலிக்கொடியை பிடுங்கிய நபரின் அடையாளம் சரியாக பார்க்க முடியவில்லை, அவர் முகத்தில் மாஸ்க் போட்டு இருந்தார் என்று கூறியுள்ளார் என்றால், சரிதான். எதிரியை நாங்கள் அடையாளம் காண்பித்த பின்பு தான் புகார்தாரருக்கு எதிரியை தெரியும் என்றால், சரிதான். புகார்தாரர் தனது புகாரில் செயினை பிடுங்கிய நபரின் வயது, நிறம் மற்றும் என்ன உடை அணிந்திருந்தார் என்கிற எந்த விவரமும் கூறவில்லை என்றால், சரிதான். நான் தயார் செய்த பார்வை மகஜரில் மிளகாய் பொடி தூவியதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் மீது மிளகாய் பொடி முகத்தில் வீசியது குறித்தும், அவருக்கு ஏற்பட்ட காயங்குறித்தும் மருத்துவரிடம் என்ன சிகிச்சையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றால், சரிதான்.

மேலும், நான் எதிரியை 20.08.2022-ம் தேதி தான் கைது செய்தேன் என்றால், சரிதான். எனது விசாரணையில் யுவராஜ் மற்றும் ரமேஷ் 21.08.2022-ம் தேதி தான் எதிரியை கைது செய்ததாக கூறியுள்ளார்கள் என்றால், சரிதான். ஆனால் அது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி ரமேஷ் மற்றும் யுவராஜின் வாக்குமூலங்கள் காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டதா என்றால், கைது செய்த இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வாக்குமூலம் பெறப்பட்டது. ஆனால் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் 20.08.2022-ம் தேதி ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் 27.08.2022-

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:30:24 +0530

ஆம் தேதி மற்றொரு ஒப்புதல் வாக்கு மூலமும் பெற்றோம் என்றால், சரிதான். 20.08.2022–ம் தேதி பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலேயே இந்த வழக்குச் சொத்தான நகையை பற்றிக் கூறியுள்ளார் என்றால், சரிதான். அன்றைய தினமே மேற்படி நகையை மீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

மேலும், அன்றைய தினம் எதிரியை இரவு நேரம் வைக்க முடியாது என்பதால் நீதிமன்ற அடைப்புக் காவலுக்கு ஆஜர் படுத்தினேன். மேற்படி வழக்கு சொத்தான நகையை அன்றைய தினமே மீட்க நான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால், சரிதான். எதிரி முத்தூட் பைனான்ஸில் தான் நகையை வைத்தார் என்பதற்கு அங்குள்ள சிசிடிவி பதிவுகள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எதிரி முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர் என்பதை எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான்.

மேற்படி வழக்கு சொத்தான நகைகள் புகார்தாரரினுடையது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். புகார்தாரர் தனது புகாரில் தனது நகை எவ்வாறு இருக்கும் என்பது குறித்த வடிவம் போன்றவை எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி யாரிடம் இருந்தும் நகை பறிக்கவில்லை என்றாலும், எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதுவும் கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாமல் எனது உயர் அதிகாரியின் அழுத்தத்தின் காரணமாக எதிரி மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J — Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.03 17:30:34 +0530

Sd/– (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani